# இந்துதேச சரித்திரச் சிந்து.

---

தூத்துக்குடி, காரப்பேட்டை, நாடார்

ஆண் பாடசாலை ஆசிரியர்

பால். எதல்பட் கோனார் அவர்களால்

இயற்றப்பெற்று,

42
N32
170843

...டி நாடார் பிரிண்டிங் பிரஸில்

...பதிப்பிக்கப்பெற்றது.

---

[Rig... ...eserved] [விலை அணா 4

# முன்னுரை.

இப்புத்தகம் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் சிறுவர் சிறுமிகள் இந்துதேச சரித்திரத்திற் படித்துக் கொள்ளவேண்டிய முக்கிய விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கு உதவியாகவும் இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் இந்துதேச சரித்திரம் அறிய வேண்டியது மிகவும் அவசியமானபடியால் தமிழ் நாட்டிலுள்ள ஆண்பெண் யாவரும் இன்பமாய் வாசிக்கவும் வாசிக்கத்தெரியாதவர்கள் இன்பமாய்க் கேட்கவும் வாசித்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும் வசனத்தைவிட சங்கீதமே குதூகலத்தை விளைவிக்குமாதலாலும் எளிதான பள்ளுராகத்தில் வெகு சிறுபான்மையும் நொண்டிச்சிந்துராகத்தில் பெரும்பான்மையும் பாடியுள்ளேன்.

இப்புத்தகத்தைச் சகலரும் வாங்கிப்படித்தானந்திக்கும்படிக்கும் இதை ஆதரிக்கும்படிக்கும் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கற்றுவல்ல பெரியோர்கள் ஏதேனுந் திருத்தந் தெரிவித்தால் அதைச் சந்தோஷமாயும் நன்றியோடும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

பா. எ.

## நான்கெல்லைகள்

### ஆற்றுவெள்ளம் நாளைவர "என்றமெட்டு"

நம்முடைய இந்தியாவின் எல்லையைக்கேளு
நலமுடைய இமயமலை வடதிசைதன்னில்
அம்மா அசாம்ராஜ்ஜியமும் மேலபர்மாவும்
அணிபெறு வங்காளவிரி குடாவுங் கிழக்கில்

எம்முடைய கன்னியா குமரிக்குத் தெற்கே
இதமுடைய தென்றல்தரும் இந்துசமுத்ரம்
தம்பக்கமேவாழ்விக்கு மாராபிக்கடலும்
தக்கபெல்ச் சிஸ்தானமாப்கா னிஸ்தானமேற்கில்

## பூர்வீக குடிகள்

ஆதியிலே வந்தவர்கள் தூரானியரென்பார்
அவர்பின்னே வந்தவர்க ளாரிய ரென்பார்
கோதில்லாத தொழில்தனையே இவர்கள்செய்தார்கள்
கும்பலாக ஆடுமாடு விர்த்தி செய்வதே

முன்னேவந்த தூரானியர்கள் கைபர்கணவாய்
முடுக்குவழியாசச்சிந்துக் கரையிலமர்ந்தார்
பின்னேவந்த ஆரியர்கள் பிரமபுத்திரா
பெரும்பள்ளத்தாக்கின் வழியாய்க் கங்கையமர்ந்தார்

ஜாதிதன்னைப் பிராமணர்கள் க்ஷத்திரியர்கள்
தக்கபயிர் வைசியர்கள் சூத்திரரென்பார்
வேதியராம் ஆரியர்கள் தூரானியர்களை
வெகுதுன்பப்படுத்தித் தெற்கே விரட்டிவிட்டார்கள்

தெற்கே தோற்றோடிவந்த தூரானியர்களும்
திராவிடதேசம் அமர்ந்து திராவிடரானார்
அற்பமான குடிகளாக முன்னமேயங்கு
அமர்ந்துளாரே ஆதிதிரா விடர்களே யாவர்

## நொண்டிச்சிந்து

தேந்தன தேனதேனனா-தேனனா
தேந்தன தேனதேன தேனதேனனா.

### ராமாயாணம்

வடக்கே யயோத்திதன்னில்-வாழ்ந்த
வாளரசன் தசரதன் தன்மனைவிமார்
மடந்தையர் மூவர்உளர்-அவர்களுள்
மாட்சியுறுகோசலை ராமரைப்பெற்றாள்

V2
N22

கைகேயி பரதனின் தாய்-கருத்துள்ள
லக்குமணன் சத்ருக்கணன் தாய்சுமித்திரை
பைக்கோளரவுபோலே-கைகேயி
பாவிபல நஞ்சுடைய நெஞ்சுடையவள்

ராமருக்குப் பட்டங்கட்டிட-தசரதர்
ராசியுள்ள தினமொன்றுராய்ந்திட்டபோது
சோமனுக்கு ராகுகேதுபோல்-கைகேயி
சூழ்ச்சியுடன் பட்டாபிஷேகந் தடுத்தாள்

பதினான்கு வருஷங்களாய்க்-காட்டில்
பாடுபட்டுத்திரிய வோர் ஏற்பாடுஞ்செய்தாள்
சதியாகப் பரதனுக்குத்-தட்சணம்
சாம்ராஜ்யப் பட்டமுங் கட்டிடச்செய்தாள்

காட்டுக்குப்போன ராமரின்—பின்னால்
கற்பரசி சீதைலக்குமணன் தொடர்ந்தார்
கேட்டுக்கு மூலமெனலாம்—ராவணன்
கேவலமாய்ச் சீதையைச் சிறையெடுத்தான்

ராமரும்லக்குமணரும்—ராவணன்
சாமளவும் யுத்தஞ்செய்து சிறையைமீட்டார்
ஆமடா தம்பிமார்களே—எல்லாரும்
அருமையாய் ராமாயாணம் என்பதிதுதான்—தெந்

## மகாபாரதம்

இன்னுமொரு ராஜ்ஜியமங்கே—மிகவும்
எழில்பெற வாழ்ந்தது அஸ்தினாபுரம்
மன்னரங் கிருவருளர்—சகோதரர்
மாட்சியுறு பாண்டுத் ரிதராட்டிரனென்போர்

பார்த்திபர் இவர்கள்மக்கள்—பலமுள்ள
பாண்டவர்கள் கௌரவர்கள் இருகட்சியார்
ஆர்த்தனர் சண்டையிட்டு—அய்யய்யோ
அன்யாயமாய்க் குருக்ஷேத்திரமதில்

பதினெட்டுநாள் சண்டையில்—அரசர்
பலர் மடிந்திவ்வுலகந்தன்னை விடுத்தார்
அதிகம் கௌரவர்மடிந்தார்—இதுதான்
அனியாய மாபாரத யுத்தமுமென்பார்—தெந்

## புத்தர்

வளமுள்ள கபிலவாஸ்து—தன்னில்
வாழ்ந்துவந்த அரசர்சுத்தோதனர் என்பார்
இளவயதில் மாயாதேவி—இவர்க்கு
எழில்பெறுங் கௌதமரைப் பெற்றெடுத்தனள்

ஆயுதப்பயிற்சி முற்றும்—மற்றும்
ஆராயும் நூல்களெல்லாம் அமைந்தகல்வி
வாயுவேகம் மனோவேகமாய்க்—கற்றபின்
வாழவைத்தார் கோபாவென்னும் ராஜஸ்திரியுடன்

இவர்கட்குமகன் ரகுலன்—கௌதமர்க்கு
இருபதும் ஒன்பதுமாம் வயதினிலே
இவர்க்கோர் தோற்றமுண்டாய்—என்றும்
இலங்கிடும் புத்தமார்க்கம் தன்னைப்போதித்தார்

தன்னையே புத்தரென்றார்—இதையே
சார்ந்தவர்களி லசோகர் முக்கியரென்பார்
பின்னமுறு ஜாதியேயில்லை—எல்லாப்
பிராணிகளின் மேற்கருணையாவதே கொள்கை—தெந்

## பூர்வீக இந்து ராஜ்யங்கள்

இன்னும் வேறுராஜ்ஜியங்கள்—அங்கே
எழில்பெறவிருந்தன சொல்கிறேன் கேள்
மன்னுமா மகதராஜ்யம்—அதிலே
மகிமையுடைய வரசோகரென்பார்

ஆந்திர ராஜ்ஜியமொன்று—அதிலே
அந்தமுள்ள விக்கிரம வாதித்தனுண்டார்
சாந்தமுள்ள விக்மாதித்தன்—பேரால்
சகாப்தமும் ஒன்றுஇன்னும் நடக்கிறது

தென்திசை தன்னிலுங்கூட—கேளம்மா
சிற்சில ராஜ்ஜியங்களிருந்தனவாம்
மன்னிய சீர்சோளசேர—பாண்டிய
மலையாளம் என்ற கேரளராஜ்ஜியம்

பாண்டிக்கு மதுரைநகர்—முக்கியமாம்
பழைய சோழராஜர்க்குக் காஞ்சிபுரமாம்
ஆண்டார்கள் சேரராஜர்கள்—கேளம்மா
அழகான திருவாங்கூர் கோயமுத்தூரை

கோளராஜர்கள்தான்—கேளம்மா
கீர்த்தியுடனுண்டார் மலையாளம் கன்னடம்
மாரன்நம் சக்ரவர்த்திபோல்—இந்தியாவை
மாட்சிபெற முற்றிலுமாயாண்டவரெவர்—தெந்

## மகா அலெக்சந்தர்

பின்னாலே கைபர்கணவாய்—வழியாய்
புகுந்தவர் மாஸிடோன் தேசத்தையாண்ட
மன்னன் மகா அலெக்சந்தர்—இந்தியாவின்
மாவளத்தைக் கேட்டதினாலோடியே வந்தார்

வந்த அலெக்சந்தர்தன்னை—வீரமாய்
வழிமறித்துப் போர்செய்தார் புருஷோத்தமர்
எந்தெந்த விதமதிலும்—புருஷோத்தமர்
ஏற்றம்பெறமுடியாமல் தோல்வியடைந்தார்

ஜீலம்நதிக்கரையில்—புருஷோத்தமர்
தீரத்துக்க ரசையிலவசமாய்ப் பெற்றார்
காலம்மிகச் சென்றதினாலே—அலெக்சந்தர்
கடுஞ்சேனைமுன்செல்ல முறுமுறுத்தார்

ஆனதினால் அலெக்சந்தர்—தன்னாட்டுக்
ககன்றிட வேண்டுமென்று திரும்பிக்கொண்டு
போனபோது பாபிலோனில்—போர்வீரன்
பொல்லாத ஜுரம்கண்டு இறந்துவிட்டார்—தெந்

## கஜினி மகம்மது

காலம்மிக்கக் கழிந்தபின்னால்—கஜினி
கட்டழகன் மாமூது வந்துபுகுந்தார்
மேலும்மேலும் படையெடுத்துப்—பன்னிருதரம்
மிகுதியாய்ப் பொருள்களைக் கொள்ளையடித்தார்

சோமநாதபுரம் கோவிலில்—துலங்கிய
சொரூபமுடைத்து மிகப்பொருள்கள் கொண்டார்
ஓமம்வளர்க்குமாரியர்—தங்களால்
ஒன்றுஞ்செய்ய முடியாமல் மயங்கிநின்றார்

அக்கிரமமாக யிவ்விதம்—இந்துக்களின்
அனேகமான கோயில்கள் நொறுக்கினதால்
விக்கிரக நிக்கிரஹன்—எனும்பெயர்
விளங்கிற்றவருக்கிந்த மேதினியினில்—தெந்

## மகம்மது கோரி

மகம்மதுகோரி நுழைந்தார்—இவரும்
மறுத்து மறுத்தொன்பதுதரமும் வந்தார்
அகங்கொண்ட இவரோடு—டில்லியின்
அரசன்பிருதிவி தனேஸ்வரத்தில்

ஜெயமாகச் சண்டைசெய்தார்—ஆனாலுந்
திரும்பவுவ கோரி யிதே யிடத்தில்
ஜெயங்கொண்டார் பிருதிவியை—மேலும்
திரமாக ராஜ்ஜியத்தை ஸ்தாபித்துவிட்டார்

மாளவ தேசந்தவிர—இந்தியாவில்
மற்றவிடமெல்லாமே ஜெயித்துக்கொண்டார்
ஆளக்குட்புடீனைவிட்டு—அவரும்
அடைந்த வழிக்காகரால் கொல்லப்பட்டார்

குட்புடீன் அவர் அடிமை—ஆதலால்
கொஞ்சக்காலம் அடிமைகள் ஆண்டுவந்தார்
திட்டபா யிவர்கட்பால்—இந்தியாவில்
திறமுள்ள கில்ஜிவம்சத்தவர்களாண்டார்—தெந்

## அல்லாவுடீன் கில்ஜி

அல்லாவுடீன் கில்ஜிகாலத்தில்—இந்தியாமேல்
அமர்புரி மோஹலாயர் படையெடுத்தார்
எல்லையை விட்டுத்துரத்தி—அல்லாவுடீன்
எழில்பெறச் செய்தபின் ராஜபுதனம்

கோட்டைகளைப் பிடித்து—மிகவுங்
கொள்ளையிட்டு ரஜபுத்ரர்களையுங்கொன்று
வாட்டிவிட்டார் இந்துக்களை—இவ்வித
வன்கொடுமைக்காரர்களில் இவர்ஒருவர்

மாலிக்காபூர் சேனைத்தலைவர்—இவர்க்கு
மற்றுமுள தென்னாட்டைக் கீழ்ப்படுத்தினர்
வேலிபயிரை மேய்ந்தாற்போல்—மாலிக்காபூர்
வெங்கோலரசரிவர்தன்னைக் கொன்றிட்டார்—தெந்

## டோக்ளாக்

டோக்குளாக்கு வம்சத்தவரில்—மகம்மது
டோக்குளாக்கு என்பவரே முக்கியமாவார்
நீக்குப்போக்கு ஒன்றுந்தெரியா—இந்த
நிர்மூடராஜன்கதை சொல்லுகிறேன்கேள்

சினவை ஜெயிக்கவென்றும்—சேனைகள்
சீக்கிறம் இமயமலைதாண்டுகவென்றும்
தானைகக் கட்டளையிட்டார்-மற்றுந்
தந்திரிகள் மந்திரிகள் யோசனையின்றி

போனவர்கள் குளிர்பொறுமல்—அங்கே
புலம்பியுயிர்விட்டவர் அனேகராக
போனவர் களிற்சிறிதுபேர்—திரும்பிவரப்
பொல்லா ராஜனிவரைக்கொல்லவே செய்தார்

பரிகள்போல்சேனை வீரரைத்—தோப்பராவில்
பரிகாசமாகத் தினிதின்னவேவைத்தார்
வரிகளை உயர்த்திவிட்டார்—முடியாமல்
வனமோடிச் சென்றவரை வேட்டையாடினர்

டில்லிவிட்டுத் தேவகிரியைத்—தனக்கு
இராஜதானி யாக்கிக்கொண்டு குடிகளையும்
இல்பொருள்களெல்லாமே கொண்டு—என்னுடன்
இட்சணம் புறப்படுங்கள் இல்லாதவரை

வம்பிலே கட்டியடிப்பேன்—உங்களை
வழியெல்லாஞ் செத்தநாய்கள் போலேயிழுப்பேன்
கும்பலாய்ப்புறப்படுங்கள்—என்று
கொடுங்கோலரசனுங் கட்டளையிட்டார்

வழியிலனேகரிறந்தார்—மேலும்
வந்தவரைத் திரும்ப டில்லிக்கேகென்றூர்
கழிந்தார் அனேகர்செத்து—ஜனத்தொகையில்
காசுபெறுத தோலாற்காசுகள் செய்தார்

இந்தவிதமான கொடுமை—கேளம்மா
எவருமே செய்ததில்லை இந்தவுலகில்
இந்தப்பைத்யகார டோக்குளாக்—தனது
இறந்த வோர்பல் புதைத்துக்கோரியமைத்தார்—தெங்

## இப்ராஹிம்லோடி—பேபர்—ஹுமாயூன்—அக்பர்

லோடியெனும் வம்சத்தில்--முக்கியமாம்
இப்ராஹிம்லோடி அவர்தான்கடைசி
பீடில்லா சையதுவம்சம்--என்றொரு
பிரபலமாகாவம்சம் ஆண்டதுமுண்டு

இப்ராஹிம்லோடி யென்பவர்--இந்துக்களை
இடுக்கண்கள் அதிகமாய்ச் செய்ததினுல்
எப்படித் தொலைக்கலாமென்று--லோடியை
எதிர்க்கவே பேபரை வேண்டிக்கொண்டார்

பானிப்பட் டென்னுமிடத்தில்-லோடியைப்
பறக்கச்செய்து ராஜ்ஜியம் ஸ்தாபித்துக்கொண்டார்
தானினைத்திட்டபடியே-பேபர்
சர்வமுங்கைக்கொண்டார் குஜாத்துநீங்கலாய்—தெங்

பேபரும் மோஹலாயர்-அவரும்
பிரபலமானகஜி னியிலாண்டவர்
பேபரின்மகன் ஹுமாயூன்-அவர்மகன்
பேர்பெற்ற அக்பர்தகும் வயசில்லாமல்

பைராம்கான் ஆண்டுவந்தார்-பிறகு
பைராம்கானே அவர்க்கு முடிசூட்டினுர்
வைராக்யம் மதத்தில்கொண்டு-எவரையும்
வம்புகள்பேசுவதகக மென்றேயறிந்து

இந்துக்கள்மேல் பட்சமும்-இவர்க்கு
எம்மதமுஞ்சம்மதமாங் கொள்கையுமுண்டு
அந்தமுளராஜபுத்ரரை-அக்பரும்
ஆதரித்துக் கல்யாணசம்மந்தஞ் செய்தார்

ஜான்பூர் வங்காளங்காஸ்மீரம்-இவைகளை
தனக்குச் சுயார்ஜ்ஜிதம் செய்துகொண்டதால்
வான்முகலராஜ்ஜியமும்-நமது
வளமுள இந்துஸ்தானம் பூராவாயிற்று

அக்பர்மிகச் சுந்தரமுள்ளார்-மேலும்
ஆர்வமொடு கல்வினை ஆதரித்திட்டார்
சக்கிமுக்கித் துப்பாக்கிதன்னில்-இவர்க்குச்
சமமாக யாவரையுஞ்சொல்லவே ஒண்ணு

கோட்டை முற்றுகையிட்டால்-கையிற்
கொண்டாற்ருன்றிரும்புவ தல்லாற்றிரும்பார்
வேட்டைமான்கள்போலே யிருந்த-இந்துக்கட்கு
விரும்பியே ஜாஸியாவரிதள்ளினுர்

சட்டதிட்டங்களெல்லாம்-இவர்செய்த
சரியானஅயினியக் பாரியிலுண்டு
மட்டில்லாக் கருணையோடு-குடிகள்
மகிழ்வுடன் வாழ்வதற் கிடமுஞ்செய்தார்—தெங்

## ஜிஹாங்கீர்

அக்பரின் மகன்ஸலீமும்-ஏழையான
அழகியபார்சிப்பெண் நூர்ஜிஹான்மேல்
பக்குவமாகுமுன்னே-அவளும்
பண்பாய்த்தன் தகப்பனோடாண்மனைக்கு

வரக்கண்டு காதலுற்றார்-ஆனாலும்
வன்கண்ணாய் அக்பரும் ஜோதிபாயை
தாமாய் ஸலீம்தனக்குச்-செய்து
ஷார்ஆப்கனுக்கு நூர்ஜிஹானைச்செய்தார்

காதல்கொண்ட ஸாலீமும்-என்றும்
கனவிலும் மறந்திலன் நூர்ஜிஹானை
ஆதலால் நினைத்தபடி-முடிப்பதற்கு
அவருக்கேற்றவேளையும் வந்துசேர்ந்தது

அக்பர்இறந்தபோது-ஸாலீம்
அன்பாய் ஜெஹாங்கீரென்னும் பட்டந்தரித்து
தக்கஷார் ஆப்கனைக்கொன்று-நினைத்தபடி
தந்திரமாய் நூர்ஜிஹானை மன்றல்முடித்தார்

நூர்ஜிஹானே ராஜரீகம்-செய்துதன்
னூர்மகிழ உத்தியோகந்தானுமளித்தாள்
பார்புகழ ஆண்டுவந்தனள்-எந்தப்
பார்த்திபனு மிவள்போல ஆண்டதேயில்லை—தெக்

## ஷாஜிஹான்

ஸலீம்மகன் ஷாஜிஹானே-யவர்மனைவி
தாண்டாத அழகுள்ள மும்தாஜ்மஹால்
நலிந்து சாகுந்தருணத்தில்—அவரிடம்
நயந்து வரங்கள்ரெண்டுதான் வேண்டினள்

ஆகவே ஷாஜிஹானும்—அவட்குப்பின்
ஆரையுங் கல்யாணஞ்செய்யவேயில்லை
நாகலோகம் சுவர்க்கலோகம்—எங்கணும்
நாங்காணா அழகுள்ள கோரியமைத்தார்

இதுவே இப்பூவுலகினில்—ஏழ
எழில்பெறுங் காட்சிகளில் முதன்மையாகும்
இதுவே தாஜ்மஹாலாம்—இதற்கு
எத்தனையோ கோடிரூபாய் செலவுஎன்பார்—தெந்

## ஔரங்கசீப்

ஷாஜிஹான் மக்கள்நால்வர்—இவர்களில்
தந்திரமிகுந்தவர் அவுரங்கசீபு
பூஜிதஞ்செய்துடன் பிறப்பைத்---தந்திரமாய்ப்
பொன்றுவித்துத் தகப்பனைச் சிறையில்வைத்து

டாம்பீகப்பட்டம் வகித்துக்-குடிளெல்லாம்
தாம்தழுவும் மார்க்கமே தழுவவென்று
சாம்படியாய் ஆக்கினைசெய்து—இந்துக்கள்மேல்
ஜாஸியாவரிமறுத்து எற்படுத்தினர்

உத்தியோகந்தன்னிலிருந்து—இந்துக்களை
ஓட்டிவிட்டுக் கோயில்களைப் பொடியாக்கினர்
மித்துருக்களானவரையும்—அவருக்குச்
சத்துருக்களாகவே மாற்றிவிட்டார்

இந்துக்களும் ரஜபுத்ரரும்-இன்னும்
எழிலுடை மஹாராஷ்ட்ர ஜாதியாரும்
தந்திரிகள் மந்திரிகளும்-தன்மகர்சுற்றம்
தளகர்த்தர்கள்வரை பகையாகி

வந்தது நாசகாலம்—மொஹலாய
வளமுள்ள ராஜ்ஜியத்துக் கிவராலே
தந்திர வவுரங்கசீப்-தன்சீக்காய்த்
தனித்துமே ஆமத்நகர்தன்னிலிறந்தார்—தெந்

## சிவாஜி

இப்படியிருக்குங்காலே—இந்தியாவில்
இன்னொருவர் சிவாஜி யென்றெழும்பினர்காண்
ஒப்பில்லா பலமுள்ளவர்-இவரை
உரித்தாகக்காண்டியோ தாதாஜிவளர்த்தார்

மஹராஷ்ட்ர பாண்கிலேவம்சம்—இவரும்
மலிந்த பலமுள்ள ஷாஜிபுத்திரர்
தகவாய் வாசிக்களழுத-இவரும்
சற்றேனுமறியா நிரக்ஷரகுக்ஷி

ஆனாலும் ராமாயாணம்—பாரதம்
ஆகும்முதலானவற்றின் வீரத்தைக்கேட்டு
தானக வீரனுனர்-மேலும்
தந்திரமாய் டோர்ணக்கோட்டை கொள்ளையடித்தார்

மாணப்பொன் குவியலொன்று—அக்கோட்டையில்
மண்தோண்டிப் பார்த்ததிற் கிடைத்ததினல்
வேணபடி ஸைகார்கோட்டையை-வளைத்து
வேண்டுமாயுதங்களும் சேகரித்திட்டார்

பீஜப்பூர் அடில்ஷா நவாப்-கோட்டை
பெலமுள்ள கலியாணி முற்றுகைசெய்து
ஆஜர் ஆன அப்ஸல்கானும்-அதிபதியை
அதிகத்தந்திரமாக மாய்த்துவிட்டார்

தந்திர ஔரங்கசீபின்—பிரதிநிதி
சய்யிஸ்டகானையுந் தக்ஷிணத்தில்
தந்திரமாய்க் கொன்றுவிட்டு—ஔரங்கசீபின்
தக்க சூரத்துக்கோட்டை கொள்ளைசெய்தார்

மெக்காவேகும் யாத்திரீகரைக்-கொண்டுசெலும்
மொகலாயக் கப்பல்களை வழிமறித்து
மிக்கவே பொருள்கள்பறித்து—ஔரங்கசீபை
மிகவுங் கோபங்கொள்ளச் செய்ததினல்

அடியோடே சிவாஜிதன்னைத்—தொலைத்திட
ஔரங்கசீப் பெருஞ்சேனையனுப்ப
நடிக்கும் சிவாஜியப்போது-நயம்பட
நல்வார்த்தைசொல்லி மொஹலாயர்களிடம்

பூரண்டர் உடன்படிக்கை-செய்தார்
பொருதுஜெயித்த நாடெல்லாமே கைவிட்டார்
வீரமுள ஔரங்கசீபும்-நான்கு
விகிதத் தொன்ருஞ் * சௌத்திவர்க்குக்கொடுத்தார்

தானே ஔரங்கசீபின்-விருப்பப்படித்
தனித்துசிவாஜி டில்லிசென்றபோது
வீணே அவமானம்-ஔரங்கசீப்
வேணுமென்று செய்தாரென்று வெகுண்டிடவும்

அடைத்திட்டார் அவுரங்சீப்-அவரை
அதிகத்தந்திரமாகச் சிறைச்சாலையில்
அடைபட்ட ஸ்வாஜிமன்னன்-அங்கிருந்து
அதிகத்தயிரியமாய் ஸைகார் சேர்ந்திட்டார்—தெந்

---

* சௌத்—வரியில் நாலில் ஒன்று

# இங்கிலீஷ்

துரைத்தனத்தார் வந்தவிபரம்—உனக்கு
துலக்கமாய்ச் சொல்லுகிறேன்கேளடாதம்பி
அரைபியா தேசவழியாய்-ஐரோப்பியர்
அதிகக்கஷ்டப்பட்டு வந்துசேருவார்

ஈரிருநூறு வருஷங்-கட்குமுன்
இவர்கள் வியாபாரம் ஆரம்பித்தது
சேரிரு பொதிபோட்ட-ஒட்டகம்
சீரான குதிரை கோவேறுகழுதை

திரள்திரளாக ஓட்டி—மழைவெயில்
சிரமம் ஒன்றும்பாராமல் கொண்டுவருவார்
மரக்கலத்தால் வந்தது—முதலில்
மகிதலத்தோர் போற்றும் வாஸ்கோடிகாமா

கரைவந்தார் கள்ளிக்கோட்டையில்-அவர்க்குக்
களித்து ஸாமரீனனுமதி கொடுத்தார்
தரையின்றி மரக்கலத்தில்—அவர்க்குப்பின்
தகுதியான அல்பான்ஸோ அல்புகர்க்கும்

கரைவந்தார் கோவாவில்-இந்தக்
கனத்த வணிகரிருவர்க்கும் போர்த்துக்கல்
திரைகடலோடுபவர்-இவர்களின்
திண்ணியகடல்மார்க்கந் தன்னையறிந்து

வந்தார்கள் பலதேசத்தார்-அவர்களை
வகைவகையாக நான்சொல்லுகிறேன்கேள்
அந்தமுள்ள டச்சுக்காரர்-அவர்பின்னால்
அதிகமாய் டேன்ஸ்இங்கிலீஷ் பிரெஞ்சுக்காரர்—தெங்

ஆயிரத்தைந்நூற்றுத்தொண்ணூறும்-ஒன்பதும்
ஆனவருஷமதிலிங்கிலாந்தில்
ஜாயின்ற்ஸ்டாக் கீஸ்றிண்டியா-கம்பேனி
தகுதியாயனுமதிப் பத்திரம் ஒன்று

ராணிஎலிஜபேத்திடம்-பெற்று
ரமணீகரமான கப்பல் வாணிபம்
ஆணிப்புத்து முதலாக-எல்லாம்
அதிலாபக் கொள்முதல் விற்பனைசெய்து

சூரத்தார் மகான்மசூலிப்-பட்டணத்தில்
சொந்தப்பண்டகசாலை கட்டிக்கொண்டார்கள்
தீரன் சந்த்ரகிரியரசர்-இடமாகிய
சென்னையில்ஸென்ற்ஜார்ஜுக் கோட்டை கட்டினார்

போட்டு உல்லியம் கோட்டையைத்-தக்கபடிப்
புகழ்பெற்ற கல்கத்தாவில் கட்டினூர்கள்
போர்த்துக்கல் தேசத்தரசர்-புத்திரியை
புகழ்பெற்ற சாள்ஸரசர் மன்றல்முடிக்க

சீதனமாகிய பம்பாய்ப்-பட்டணத்தை
சீர்வருஷம் பத்துப்பவுண் * கொதுவைபெற்ருர்
பாதஞ காஸிம்பஸார்-ஹூக்ளிப்
பக்கங்களில் பண்டகசாலைகள் வைத்தார்

இப்படி இவர்கள்செய்ய-எதிர்த்து
இவர்போல் பிரெஞ்சும் ஒருகம்பேனிகூடி
அப்படியே மாஹிபுதுவை-சந்த்ரநகூர்
அழகாய் எனுமில் களஞ்சியங்கள் வைத்தார்

தேவனும் பட்டணத்தில்-பிரெஞ்சுக்காரர்
சிறந்தடேவிட் கோட்டையைக்கட்டினூர்கள்
காவளர் புதுச்சேரியே-பிரெஞ்சு
கவர்ணாகிய டூப்ளே இருப்பிடமாம்—தெங்

ஆயிரத்தேழ்நூற்றுநாற்பதும்—எட்டும்
ஆனவருஷத்தில் நைஜாமல்முல்க்குக்கு
ஆயிற்று இறுதிக்காலம்-அப்போது
அவர்மகன் நாஸர்ஜங்கோடுமருகன்

முஸபர்ஸங் கலகம்செய்ய-பிரஞ்சுக்காரர்
முழுஉதவியினூலே நாஸர்ஜங்கை
முஸபர்ஸங் கொன்றுவிட்டு-உடனே
முடிசூட்டிக்கொண்டான்தனக் கைதராபாத்தில்

ஆனுலும் சீக்கிரமாய்-எப்படியோ
அவருமே கொல்லப்பட—ஸலபட்ஜங்கை
சேனுதிபதி புஸ்ஸியும்—அங்கே
சிறந்தகவர்ணர் டுப்ளே கட்டளையால்

ஆக்கினூர் நவாபாக—அதுமுதல்
அதிகமாயிற்று பிரெஞ்சதிகாரம்
சீக்கால் கர்நுடகநவாப்—அன்வாருடீன்
செத்திட அவர்மகன் மகமதாலிக்கும்

சந்தாசாபென்பவருக்கும்—மிகுந்த
சண்டைகளுண்டானதில் பிரெஞ்சுக்காரர்
சந்தாசாய்புக்குதவியாய்—நின்று
தகுமுடிசூட்டினூரார்க் காட்டுநவாபாய்

---

* கொதுவை—குத்தகை

ஓடினான் மகமதாலி—திருச்சியில்
ஒளிந்து உயிரினையுந்தப்புவிக்க
தேடினானிங்கிலீஷ் உதவி—அவரும்
சிறப்பான சேனையொன்று அனுப்பியதில்

சீர்மிகுங் கிளைவ்என்பவர்—அவரின்
திண்ணிய தயிரியத்தால் ஜெயமுங்கொண்டார்
ஆர்க்காட்டைக் கிளைவ்பிடித்தார்—உடனே
அதிகச்சேனையைச் சந்தாசாகிபனுப்ப

ஏர்பெறுந் திருச்சிக்கோட்டை—முற்றுகை
இறுந்து மகமதாலிசுகமும் பெற்றார்
ஆர்க்காட்டில் யுத்தஞ்செயித்த—க்ளைவென்னும்
அதிபால்ய வீரனின் சரிதைகேளு

சீர்கெட்ட சிறுவருடன்—இவரும்
தெருத்தெருவாக வெங்குமலைபவராம்
ஆர்க்குமே யடங்காமல்—இவரும்
அக்கிரமப்பையன்களின் தலைவரானார்

பள்ளிக்குப் போகமாட்டார்—போனாலும்
படிப்பிலே கவனம்சற்றில்லையே யென்று
தள்ளிவிட்டார்கள் பெற்றோர்கள்—தொலைக்குச்
சரிபிழைத்தாலுமிவன் செத்தாலுமென்று

வந்தவர் கம்பேனியில்—தனக்கு
வாய்த்ததோர்சிறு உத்யோகந்தன்னிலமர்ந்தார்
பிந்திநேரிட்ட சண்டையில்—இவரும்
பெற்றிபெறும் வழியாகப் போருக்கேகினார்

ஆயிறத்தேழ்நூற்றுஐம்பதும்—இரண்டும்
ஆனவருஷம் சந்தாசாகிப் இறந்தார்
தீவிரமாகவேதான்—மகமதாலி
சிறந்தகர்நாடக நவாப்ஆயினார்—தெந்

## ஸுராஜ்உட்டௌலா

அடுத்தவருஷங் கிளைவும்—தம்மூருக்கு
அதிகப்பொருள்களுடன் திரும்பினார்காண்
கெடுபுத்தி ஸுராஜுட்டௌலா—செய்த
கேட்டைச்சொல்கிறேன்சற்று கவனமாய்க்கேள்

ஆயிறத்தேழ்நூற்றுஐம்பதும்—ஆறும்
ஆனவருஷமலி வர்டிக்கானுக்கு
ஆயிற்று இறுதிக்காலம்—அவர்பேரன்
அதிமூர்க்கன்ஸுராஜுட்டௌலா பட்டம்வகிக்தார்

வங்காள ஸுபேதார்களில்—இவரும்
வன்கொடுமைக் காரரெனப் பேருபெற்றவர்
இங்கிலீஷ்க்கும் ப்ரெஞ்சுவுக்கும்—ஐரோப்பாவில்
ஏற்பட்டசண்டைதனை முன்னிட்டுக்கொண்டு

சந்த்ரநகூர்க் கோட்டைதன்னைப்-பிரெஞ்சுக்காரர்
சரிப்படுத்த ரிப்பேர்கள் நடத்தினார்கள்
அந்தப்படி இங்கிலீஷார்—உல்லியத்தில்
அறுந்தஇடங்களையே புதுப்பித்தனர்

இதனையறிந்த ஸுராஜ்—புதிப்பித்த
இடங்களிடிப்பதற்கு * டிரேக்குக்குச் சொன்னார்
அதன்படி செய்யாததால்—ஸுராஜும்
அதிகக்கோபத்துடன் கல்கத்தாசென்று

அகப்பட்ட நூற்றுநாற்பத்து—ஆறு
ஆண்பெண் சிறுவராய இங்கிலீஷை
தகவின்றி இருட்டறைக்குள்—தள்ளித்தள்ளிச்
சற்றுங்காற்றில்லாமல் அடைத்ததினால்

மறுகாலைதிறந்துபார்க்க—அவர்கள்
மரித்தவராகவே காணப்பட்டார்
குறுகின மூச்சோடு-மூன்றுபேர்
கூடஇருபதுபேர் பிழைத்தார்கள்

பொல்லாத ஷுராஜுட்டௌலா-இப்படிப்
புவியுள்ளவரைக்குமோர் நிந்தனைபெற்றார்
கல்கத்தா இருட்டறைதான்—இதுவும்
கடும்பழிக் குலகத்தோர் சொல்லுமாயிற்று—தெங்

கல்கத்தாவில் திரண்டனர்—இங்கிலீஷ்
கனத்தசேனைகளெல்லாம் ஒன்றாக
பொல்லாக் கொடும்பழிக்குப்—பழிவாங்கப்
போர்வீரர் கிளைவும் வாட்சனுமானார்

---

* டிரேக் வங்காள இங்கிலீஷ்கவர்ணர்

முன்னவர் தரைச்சேனைக்கும்—பின்னவர்
மொய்த்தகடற்சேனைக்குந் தளகர்த்தர்கள்
சன்னல்பின்னலாக நுழைந்து—ஸுராஜின்
சகலசேனைகளையும் முறியடித்தார்

பொல்லாத ஸுராஜும்—சமாதானம்
பொருத்தமாய்ப்பேசி உல்லியம் கோட்டையை
நல்லதாய்க் கட்டிக்கொள்ளவும்—தன்னாட்டில்
நயம்பெற வாணிபம் செய்யவுஞ்சொன்னார்

ஆனாலும் உட்பகைதான்—என்றும்
அடிவயிற்றினில் நெருப்பாகுமன்றோ
நானாஜனங்களுக்கும்—ஸுராஜும்
நலமில்லாக் காரியமே செய்துவந்ததால்

சதியொன்று உண்டாயிற்று—அதிலே
தந்திரக்கிளைவும் டௌலாசேனையினதி
பதியும் அவர்குடிகளும்—சேனாதிபதி
பலத்தமீர்ஜாபருக்குப் பட்டங்கட்டவும்

ஸுராஜுட் டௌலாவைக்—கட்டாயமாய்த்
தொலைக்கக்கிளைவு யுத்தம் ஆரம்பிக்கவும்
சோராமல் மீர்ஜாபரும்—போர்முகத்தில்
சூழ்ச்சியாய்க் கிளைவைச்சேர ஒப்பந்தம்செய்தார்

ஆயிரத்தேழ்நூற்றுஐம்பதும்—ஏழும்
ஆனவருஷத்தில் பிளாஸி யென்னும்
மாவிரிவானயிடத்தில்—கிளைவும்
மதிகெட்ட ஸுராஜும் வந்துயெதிர்த்தார்

கபடர்கமீர்ஜாபர்—எந்தக்
கக்ஷிதான் ஜயிக்குமென்று பார்த்திருந்து
உபபலமாக வந்தார்—கிளைவுக்கு
உச்சமாயாகின்றவேளை தன்னையறிந்து

ஆனாலுங் க்ளைவதனைச்—சற்றும்
அகத்தினிற் கொள்ளாமற் பெருந்தன்மையாய்ச்
சேனாதிபதி ஜாபரை-வங்காளம்
சேர்ந்த பீஹார்ஒரிஸ்ஸா நாவாபாக்கினர்

மீர்ஜாபர் இதற்காக-இங்கிலீஷ்
மேலுத்தியோகஸ்தர்கட் கினாமுங்கொடுத்து
ஈர்பத்துநான்[illegible]ணம்-கம்பேனிக்கு
இன்சொலொடுஈந்து மறியாதை செய்தனர்

தூர்த்தன்லாராஜா-டௌலா-ராஜ்மஹால்
தோற்றோடிப்போயும் பின்னால்கொடாரப்பட்டு
மூர்ஷிட பாத்தென்னுமிடத்தில்-பிடிபட்டு
முனைந்த * மீரானேவ லாற்கொலையுமானார்—தெந்

## ஐதராலி

இந்தியாவின் தென்பாகத்தில்-இருக்கும்
இசைந்தநீலகிரிமலைக்கு வடக்கே
அந்தமுள கீழத்தொடர்ச்சி-மலைக்கும்
அதிகஉயரமாம்மேல் காத்துமலைக்கும்

மத்தியுள்ள பீடபூமி-யதனை
மைசூர்ராஜ்ஜியமென்று சொல்லுவார்கள்
இத்தகைய ராஜ்ஜியத்தை-ஆண்டார்கள்
இந்துராஜாக்களே வெகுகாலமாய்

பின்னாலே விஜயநகர்-ராஜனுக்கும்
பின்னிட்டுக்கீழ்ப்பட் டிருந்ததுமுண்டு
உன்னிதவிஜயநகர்-அழிந்துபோக
ஓர்தனிராஜ்ஜியமதா யிதாயிற்று

பதினெட்டாம் நூற்றாண்டு-வரையில்
பலமுள்ளராஜாக்க ளாண்டுவந்தனர்
பதினேழுநூற்றுமுப்பத்து-மூன்றும்
பகர்வருஷம்பட்டத்துக் காளற்றுப்போக

மந்திரிகளில்ஒருவரா-யிருந்த
நந்தராஜென்பவர்பட் டங்கைப்பற்றினார்—தெந்
தந்திரஐதராலி-இவரின்
தானையில்மேலானஉத்தி யோகம்வகித்தார்

ஏழையான வீரனின்மகன்-ஐதராலி
இயல்பாய் மகம்மதிய மார்க்கத்திலுள்ளார்
காளையாம் சிவாஜியைப்போல்-இவரும்
கள்ளன்போல் வழிமறிப்பார் கொள்ளையடிப்பார்

வேண்டும் பொருள்கள்சேர்த்து-இவரும்
விரிவான சேனையொன்றின் தலைவரானார்
வேண்டுமாயுதப்பயிற்சி—தன்சேனைக்கு
விரைவாகக் கற்பித்துப் போர்வீரராக்கினார்

---

மீரான்—மீர்ஜாபரின் மகன்

மேற்சொன்ன மைசூர்ராஜா-தன்சேனையில்
மேலான உத்தியோகமொன்றுங்கொடுத்து
ஏற்றமுள்ள இவர்சேனை-உதவிக்காய்
இருந்திரவியங்களுங் கொடுத்துவந்தார்

இத்தவித மாயிருக்க-ஐதராலி
என்னென்னதந்திரமோ செய்தரசரை
சுந்தரஞ்சேர் சிம்மாசனத்தை-விட்டகற்றித்
துணிவாகத் தானுமைசூர் ராஜனுயினர்

ஆசைக்கோரளவுமில்லை-என்பதுபோல்
அகிலத்தென் இந்தியா கைப்பற்றவென்று
காசையே விர்த்திசெய்யும்-வியாபாறக்
கள்ளிக்கோட்டைத் துறையைக் கொள்ளையேசெய்தார்

எவரும்பேர்கேட்ட தட்சணம்-அய்யய்யோ
என்னநாம் செய்வோமென்று ஏங்கும்படியாய்
பவச்செயல் ஒன்றும்பாக்கியாய்-இல்லாமல்
பற்பலவிடங்களில் செய்துமேவந்தார்

தக்ஷிணநைஜாமும்-அவரோடு
தகுபல மஹாராஷ்ட்ரத்தலைவர்களும்
உச்சிதமாம் இங்கிலீஷாரும்-ஐதரை
ஒழிப்பதற்கொன்றாய்க்கூடி யெதிர்த்துச்செல்ல

நைஜாம் மஹாராஷ்டிரர்களை-ஐதரும்
நயந்துமிகுந்த பொருள்லஞ்சங்கொடுத்து
கைச்சார்பாய் வைத்துக்கொண்டு-இங்கிலீஷைக்
கடுஞ்சினமாயெதிர்த்து யுத்தங்கள்செய்தும்

எல்லாந்தன் எண்ணத்திற்கு-மாருக
இருப்பதையாராய்ந்து இங்கிலீஷை
வெல்லவே முடியாதென்று-ஐதரும்
விரும்பினர்சமா தானஞ்செய்வதற்கு

ஆனாலும் நிபந்தனைகள்-ஐதருக்கு
அதிகஇடைஞ்சலாகத் தோன்றினதால்
போனர் தந்திரமாக-ஐதரும்
போர்ட்டுசென் ஜார்ஜுசமீபமதில்

சென்னையில் இங்கிலீஷார்-ஐதரைத்
திறமாய்எதிர்ப்பதற்குத் தயாரியில்லாமல்
பண்ணினர்உடன்படிக்கை-அதன்படி
பகைவர்களையெதிர்க்க உதவவேண்டும்

மேலுமவரவர்நாடே-போருக்கு
முன்னேயிருந்தபடி கொள்ளவேவேண்டும்
காலஞ்சிலசென்றபின்னர்-மஹாராஷ்டிரர்
கனத்தசேனையோ டைதர் நாட்டிற்சிலதை

பிடித்தனர்அவரோடு-ஐதருக்குப்
போர்புரிய மாட்டாமையால் லஞ்சமும்நாடும்
கொடுத்ததாலைதராலி-இங்கிலீஷ்மேல்
கொஞ்சமும் உதவாததாற் கோபமேகொண்டார்—தெ

## வாரன்ஹேஸ்டிங்ஸ்

ஆயிரத்தேழ் நூற்றுஐம்பதில்-கம்பேனியில்
அமர்ந்தஉத்தியோகஸ்தர் வாரன்ஹேஸ்டிங்ஸாம்
மாயிருபத்திரண்டு-வருஷங்களில்
மகாசமர்த்தாய் வங்காள கவர்னரானார்

ஆயிரத்தேழ் நூற்றெழுபதும்-எட்டும்
ஆனவருஷமதி லைரோப்பாவில்
மாயிங்கி லீஷாம்பிரெஞ்சும்-மிகவும்
மனமடி வாகிச்சண்டை செய்ததினால்

இந்திய இங்கிலீஷார்-பிரெஞ்சுடைய
எழில்புதுச் சேரியையும் மாஹியையும்
வந்துகைப் பற்றிடவே-ஐதராலி
வளமாஹி யிடந்தன தென்றுதடுக்க

மீறினர் இங்கிலீஷார்-உடனே
மிகுந்தசேனையோடைதர் சென்னைக்குச்சென்றார்
ஸாறயர்க் கூட்ஐதரைத்-தோற்கடித்தார்
சமர்த்தாய்ப்போட்டோநோவோ சோளிங்கர்ஆர்ணியில்

ஆயிரத்தேழ் நூற்றுஎண்பதும்-இரண்டும்
ஆனவருஷமதில் ஐதர்இறக்க
மாவீரன் மகன்திப்புவும்-சண்டையை
மகிமையாய்விட்டிடாமற் கொண்டுநடத்த

இரண்டுவருஷங் கட்குப்பின்-இருகட்சியும்
இசைந்துமங்களூரின் உடன்படிக்கையை
உரமாகச் செய்துகொண்டனர்-போர்க்குமுன்
உள்ளபடிநாட்டினையுங் கைப்பற்றினர்—தெ

## லார்டுகார்ண்வாலிஸ்

லார்டுகாண் வாலிஸ்கவர்ணர்-ஆனபோது
லாண்டுரெவினியு செட்டில்மெண்டு
ஏற்பாடுதனைச்செய்து-ஜமீன்தார்க்கு
இருந்தநிலங்களையே சொந்தப்படுத்தி

வரியாகும்பேஷ்கிஷ்தியைத்-திட்டமாய்
வரையறுத்துத் தாக்கீது செய்ததினால்
சரியாகச் சட்டப்படி-ஜமீன்தார்கள்
சார்ந்தகுடிகளிடம் வசூல்செய்கிறார்

கள்ளிக்கோட்டை நாயர்களையுப்-மேற்குக்
கரையிலுள்ளகுடகி னிந்துக்களையும்
எள்ளருங்கன் னடதேசம்-உள்ள
எளியகிறிஸ்தவர் களையுந்திப்பு

மகம்மது மார்க்கந்தழுவ-மிகவும்
மனங்கசந்தழும்படி நிர்ப்பந்தித்தனர்
அகங்கொண்ட திப்புமேலும்-இங்கிலீஷ்
ஆதரவாந் திருவாங் கூரையெதிர்த்தார்

சென்னைராஜாங்கத்தாரைச்-சண்டைக்குச்
செல்லுமாறுகாண்வாலிஸ் கட்டளையிட்டும்
அன்னவரால் முடியாமையால்-தாமே
அரும்பெருஞ் சேனையோடு பெங்களூர்சென்று

அந்தஇடம் கைப்பற்றி-மேலும்
அரசதானிசீரங்கப் பட்டணம்சென்றார்
வந்தசேனைக்குவேண்டிய-உணவுக்கு
வழியில்லாமற் றிரும்ப நேரிட்டதுகாண்

பின்னுமடுத்தவருஷம்-காண்வாலிஸ்
பேர்பெற்றசீரங்கப் பட்டணஞ்சென்று
முன்னுமுற்றுகைபோட்டார்-அதனை
மறிக்கமுடியாமலிங் கிலீஷாருக்கு

பாதிராஜ்ஜியம்கொடுத்துத்-திப்புவும்
பண்ணினார்சமாதான உடன்படிக்கை
எதிராற்கள்ளிக்கோட்டை-யோடு
எழிற்குட கிங்கிலீஷைச் சேர்ந்ததுகாண்—தெந்

## மார்க்குவிஸ் ஆப்வெல்லஸ்லி

மார்க்குவிஸ் ஆப் வெல்லஸ்லி-இந்தியாவின்
மாகவர்ணர்ஜெனர லாகவந்திட்டார்
ஆர்புகழிங்கிலீஷை-இந்தியாவில்
அமைத்தவர் களிலிவர் இரண்டாவதாவர்

திப்பென்பவர் மறுபடியும்-பிரஞ்சோடு
சேர்ந்துகொண்டு இங்கிலீ ஷாரைஎதிர்க்க
கப்புமதிற்சீரங்க-பட்டணத்தைக்
கைநழுவ விட்டுவிட்டுத் திப்புயிறந்தார்

மார்க்குவிஸ் ஆப் வெல்லஸ்லி-மைசூரை
மகிழ்வாய்க் கிருஷ்ணரா ஜர்க்களித்தார்
சீர்கெட்டிருந்தநாட்டின்-ராஜர்க்குச்
சிறிதுசிறிதுபென்ஷன் கொடுத்துநீக்கி

தங்குபுக ழிங்கிலீஷைச்-சார்ந்த
தகைபெறு தேசங்களுடன்சேர்த்தார்
பொங்குபுசழ்தஞ்சாவூர்-மேலும்
புகழ்பெற்றகர்னு டகம்சேர்த்தார்

பீஷ்வாஸிந்தியா ஹோல்க்கார்-மேலும்
பேர்பெற்றபாண்சிலே கேய்க்குவாரென்றும்
தாஷ்டீகமஹாராஷ்டிரத்-தலைவர்களை
தமக்குத்தாழும்படியாய் யுத்தமுஞ்செய்தார்

இன்னுமோர்உதவிச்சேனை-ஏற்பாட்டை
எழில்பெறச்செய்துஇங் கிலீஷ்கவர்னர்
சொன்னஉத்தரவில்லாமல்-யாரோடும்
சூழ்பகை நட்பொன்றுஞ் செய்யலாகாது

மாபெருந்தளகர்த்தர்கள்-சேனைக்கு
மனமுவந் திங்கிலீஷாய் வைக்கவேண்டும்
காபெருமிந்தச்சேனைக்கு-வேண்டிய
கனபொருளத்தனைக்கும் நாடிடவேண்டும்

என்றதோர்ஏற்பாட்டைச் செய்து
எழிலூறுவடமேற்கு மாகாணங்களும்
பின்னுங்கடப்பைபல்லாரி-சேனையைப்
பேணுஞ்செலவுக்கென்று சேர்த்துக்கொண்டார்—தெந

## லார்டுஹேஸ்டிங்ஸ்

லார்டுஹேஸ்டிங்ஸ ுவந்தார்-இங்கிலீஷ்
ராஜ்ஜியத்தை ஸ்தாபித்ததில் மூன்ருவதாவார்
சார்ந்து இமயமலையின்-அடிவாரத்தில்
தரையெல்லா மலையான நேபாளந்தன்னில்

போர்புரிந்திங்கிலீஷார்-தமக்குப்
புகழுறத் தாரையென்னு மிடத்தைப்பெற்ருர்
சேர்ந்தபிண்டாரியர்கள்-என்னும்
திருட்டுமுரட்டுஜாதி தனைத்தொலைத்தார்

நாட்டிகமஹாராஷ்டிரத்-தலைவரான
தகுதியில் லாதபீஷ்வாதன்னையடக்கி
ஓட்டிஞர்அரசைவிட்டு-வருஷம்
ஒன்றுக்கெட்டு லக்ஷரூபாய் பென்சன்கொடுத்து

பம்பாயின்ஓர்பாகம்-இவ்வாறு
பறித்தது பீஷுவா இடமிருந்து
வம்பஞன நாஞசாய்பு-இவரால்
வளர்க்கப்பட்டஸுவி காரபுத்திர்—தெந்

## லார்டுஉல்லியம்பெண்டிங்

லாடுஉல்லியம்பெண்டிங்-என்பவர்
நன்மைமிகுந்த கவர்ணர்ஜெனரல்
காடுகளில்வழிமறிக்கும்-தக்கர்களைக்
கருவறுத்துவேரோடே தொலைத்துவிட்டார்

எங்குமில்லாதபழக்கம்-இந்தியாவில்
இறந்தகணவனேடு மனைவிசாதல்
பொங்குபுக ழென்றும் நீங்காமல்-இவரும்
பொல்லாத சட்டஞ்செய் திதனைத்தொலைத்தார்—தெந்

## லார்டுடல்ஹவ்ஸி

லார்டுடல்ஹவ்ஸிவந்தார்-இங்கிலீஷை
நாட்டின பேரிவர் நான்காவதாவார்
போர்புரிசீக்கியரை-மடக்கிப்
புவிவள முள்ளபஞ்சாப் சேர்த்துக்கொண்டார்

இன்னும்பர்மாவிற்சண்டை-செய்து
இதிலொருபாகமாகும் பெகுசேர்த்தார்
மன்னுமயோத்தி ஸதாரா—முதலான
மற்றும்பலராஜ்ஜியங்கள் தன்னையுஞ்சேர்த்தார்

சாஸ்வத இருப்புப்பாதை-மேலும்
தந்தித்தபால் அரையணுத் தலைகள்செய்தார்
ஆஸ்பத கல்விக்குச்சர்வ-கலாசாலைகள்
அமைத்தார்கல் கத்தாபம்பாய் சென்னைதன்னிலும்

குடிகளின்விபசாயம்-பெருகிடவே
குளங்கள்கால் வாய்கள்வெட்டி வளங்கள்செய்தார்
மிடி தீர்த்தகால்வாய்களில்-மிகவும்
மேன்மையானதுகங்கா நதியின்கால்வாய்—தெந்

## பெரியசிப்பாய்க்கலகம்—லார்டுகானிங்

லாட்கா னிங்குவந்தார்-வந்தவுடன்
நம்தேச வீரருக்கோர் வகைத்துப்பாக்கி
மாடுபன்றிக் கொழுப்புப்பூசிக்-கொடுத்திட
மறுதலித் தார்பெறமீ ரற்றிலுள்ளவர்

ஜாதிகெடுக்கஇவ்வித-இங்கிலீஷ்
தந்திரமானவேலைகள் செய்கிறரென்றும்
கோதிலிருப்புப்பாதையுந்-தந்தியுங்
கொண்டுபோக இந்தியாவின் வளத்தையென்றும்

புத்தியில்லாமல்நினைத்தார்-சிறைச்சாலையைப்
புடைத்துக்கை திகளையெல் லாமேவிடுத்தார்
கத்திகளா லிங்கிலீஷை-டில்லி
கத்துகட லொத்தவீதி மத்தியிற்கொன்றார்

காண்பூரில் நாணுசாய்பும்-தனக்குக்
கனபென்ஷன் இங்கிலீஷார் கொடாததினல்
வீண்எண்ணம்பலவாய்க்கொண்டு-இவரும்
விரோதம்பா ராட்டிசிப்பாய் களைஎவினர்

கர்ணல்நீல் ஜெனரல்ஹாவ்லாக்-இருவரும்
காண்பூரு சென்றபோது நாணுசாய்பு
மர்மமாய் ஓடிவிட்டார்-அவரை
மறுத்து ஒருவர்கண்ட தாகவேயில்லை

நேபாளம்போனதாகச்-சொல்லுகிறர்
நிச்சயமாய்ச் சொல்வதற்கென் ஞலியலாது
பாபாபஹதூர்ஷா-என்றெரு
பலசாலியுஞ்சேர்ந்தவ ரிக்கலகத்தில்

வீறுடன்இங்கிலீஷார்-அவருக்கு (வீறு—வெறுப்பு)
விலங்குபூட்டிரங்கூனுக் கனுப்பிவைத்தார்
மாறுபாடுள்ளதாந்தியா-தோப்பியையும்
மற்றுஞ்சில ரையுந்தூக்கி யமைதல்கண்டார்—தெக்

## விக்டோரியாமஹாராணியார்

ஆயிரத்தெண் ணூற்றுஐம்பதும்-எட்டும்
ஆனவருஷமதில் நவம்பர்ஒன்றில்
மாயிருஞாலத்தையாண்ட-விக்டோரியா
மஹாராணியார்தம்கையில் ஆளுகைகொண்டார்

இந்தியபிரஜைகளில்-கற்றவர்க்கு
எந்தஜாதியாகிலுமுத் யோகமுண்டென்றும்
தந்தம்மதக்கொள்கையை-அநுசரிக்கத்
தட்டுத்தடை யாதொன்றுங் கிட்டாதுஎன்றும்

சுந்தரமாய்வாக்களித்தார்-மேலும்
சிப்பாய்க்கல கத்திற்கொலை சம்மந்தமில்லார்
பந்தனம்நீக்கிவைத்தார்-நம்மைப்
பரிபாலிக்கமனதில் திடமுங்கொண்டார்—தெந்

## வைசிராய்கள்

இன்னமுஞ்சொல்லுகிறேன்-கேளம்மா
இந்தக்கம்பேனிகவர் ணர்ஜெனரல்தான்
பின்னமிலாவைசிராயாய்-இந்தியாவைப்
பேதமிலா தாண்டவரில் முதல்வர்கண்டாய்

கானிங்பிரபவரே-பின்னால்
கனமுள்ளபிரபுக்கள் ஒன்பதின்மர்
தேனின்மொழிக்கர்ஸான்-பிரபொருவர்
சீர்பெருகு மிண்டோ பிரபொருவர்

ஹார்டிஞ்பிரபொருவர்-பின்னால்
கனமுள்ளசெம்ஸ்போர்ட் பிரபொருவர்
லார்டுரீடிங்கொருவர்-அவர்க்குப்பின்
லார்டிர்வின்எர்ல்வெல்லிங்டன் என்பவர்—தெந்

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

இப்புத்தகம் வேண்டியவர்கள்

அடியிற் கண்டவர்களிடம்

பெற்றுக்கொள்ளலாம்.

---

பால். எதல்பட் கோனர்,

காரப்பேட்டை, நாடார் ஆண்பாடசாலை,

தூத்துக்குடி.

A. V. D. பாக்கியம் பிள்ளை,

புக் டிப்போ,

பெரிய காட்டன் ரோடு, தூத்துக்குடி.

ச. பொன்னுச்சாமி நாடார்,

ஷாப் வியாபாரம்,

புதுக்கோட்டை, தூத்துக்குடி.

S. O. கருப்பசாமி யாதவர்,

நியூ பேன்ஸி ஹால் புத்தகசாலை,

பெரியகாட்டன் ரோடு,

தூத்துக்குடி.